முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1550

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.12.2023,** புதன்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார ஞானக் குடில் படைத்து
ஓங்காரன் என்சக்தி அருளுகின்ற
உயர் ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி ஆற்றல்பட அரங்கன் நீ கலியுகத்தில்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 11 ம் நாள், 27.12.2023, புதன்கிழமை)
மாற்றம் செய்ய வந்த மகா குரு
மாதவசி உன் தர்மம் எங்கும் தழைத்து நிற்க
3. நிற்கவே உலகம் தர்மலோகமாகி
நிலவுலகில் அரங்கன் நீ சொல்லுகின்ற
ஆற்றல்மிக்க வேதம் கலந்த பூமியாக
அனைவருமே ஞானிகளாக மாற்றம் கண்டு
4. மாற்றம் கண்டு இந்த கலியுகம்
மண்ணுலகில் ஞான யுகமாக ஆற்றல் பெறும்
ஆற்றல்பெற ஞானவான்கள் ஆட்சி
அரங்கன் நீ தேர்வு செய்யும் மாந்தர்களாக
5. மாற்றமதும் கலியுகத்தில் நடந்தேறும்
மகத்துவத்தை அரங்கன் உமைகொண்டு
ஆறுமுகன் யான் அற்புதம்பட
செய்து வருதல் காண
6. காணவே அரங்கன் தொண்டரென
கலியுகத்தில் அடையாளம் கொண்டவரெல்லாம்
ஞானவான்களாக இந்த கலியில் தேர்வு செய்யப்படும்
ஞானிகளாக உருவாக்கப்படுவரப்பா

7. அப்பனே கலியுக மக்கள்
அரங்கன்பால் தொடர்பு கொண்டு
இன்புற அன்பு கலந்தவண்ணம்
இனிதே இணைந்து அரங்கன் தொண்டில் நிறைந்தால்

8. நிறையவே இந்த கலியுகம்
நிரம்பிய இயற்கை அருள்பொருள் வளமோடு
செயற்கையான தொழில் தனவளங்களெல்லாம்
சிறப்பிக்கும் வண்ணம் நிலை உயர்ந்து

9. மறுப்பின்றி பாதுகாப்பு மிக்க லோகமாக
மண்ணுலகம் உறுதிபட ஆறுமுகன் யான்
தலைமை ஏற்று நடத்துகின்ற வண்ணம்
அற்புதமான ஞான பூமியாக உருவெடுக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—